## ஒதுக்கீட்டுத் தலைப்பு -138

## சுதேச மருத்துவத்துறை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

### சுதேச மருத்துவத்துறை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 220 | ஆயுர்வேத திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,391,773,600 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 1,063,276,624 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 88,356,742 மற்றும் ரூபா 240,140,234 அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் முறையே 18.75 சதவீதம் மற்றும் 26.09 சதவீதமாகக் காணப்பட்டன. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 138 | சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 190,627,000 | 280,625,000 | 154,053,341 | 228,841,917 | 36,573,659 | 51,783,083 |
| 220 | ஆயுர்வேதத் திணைக்களம் | 624,148,000 | 296,373,600 | 609,671,540 | 70,709,826 | 14,476,460 | 225,663,774 |
| | மொத்தம் | 814,775,000 | 576,998,600 | 763,724,881 | 299,551,743 | 51,050,119 | 277,446,857 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | அதிகுறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 138 | 13801 | 85,000,000 | 7,031,290 | 3,000,000 | 8,127,400 | 36,000,000 | 19,485,964 |
| 220 | 22001 | 30,000,000 | 19,353,671 | 19,000,000 | 29,588,286 | 171,000,000 | 79,731,843 |

## 2.3 பொதுவைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் பொதுவைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 9,104,518 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 6000/0000/00/0015/0050/000 | 834,956 |
| ஆயுர்வேதத் திணைக்களம் | 6000/0000/00/0015/0101/000 | 8,269,562 |
| மொத்தம் | | 9,104,518 |

# பகுதி 2

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 138 – சுதேச மருத்துவத்துறை அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சுதேச மருத்துவத்துறை அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 12 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சுதேச மருத்துவத்துறை அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவந்திருக்காமை

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

### (ஆ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 12 மீண்டெழும் செலவின விடயங்களின் ரூபா 22,340,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாட்டிலிருந்து ரூபா 15,566,562 சேமிக்கப்பட்டிருந்ததுடன் இச் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 40 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

ii. 06 மூலதன செலவின விடயங்களின் ரூபா 27,900,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாட்டிலிருந்து ரூபா 12,962,874 சேமிக்கப்பட்டிருந்ததுடன் இச் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 40 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

iii. மூலதன செலவின விடயமொன்றிற்கும் 03 மீண்டெழும் செலவின விடயங்களிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 400,000 மற்றும் ரூபா 210,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 13801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 400,681 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

ii. 2005 ஆம் ஆண்டில் அமைச்சிலிருந்து ஏனைய அமைச்சிற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர் ஒருவரின் ரூபா 288,618 கடன் மீதி 2006 திசெம்பர் மாத கணக்குகள் பொழிப்பால் தீர்க்கப்பட்டிருந்த போதிலும், கணக்கில் அம்மீதி இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. அம்மீதியினை அமைச்சின் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்குத் தேவையான திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக பதிலளிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2012 ஆம் ஆண்டின் அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கின் படியும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை.

iii. 03 ஆண்டுகளைக் கடந்த அறவிடப்பட வேண்டியுள்ள கடன் மீதி ரூபா 96,063 ஆகும்.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 உள்ளகக் கணக்காய்வு

அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பதவி 2012 யூலை 01 ஆந் திகதி முதல் வெற்றிடமாக உள்ளதுடன் அத்திகதியிலிருந்து உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இயங்கியிருக்கவில்லை.

### 1.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபையினை செயற்படுத்தல்

மீளாய்வாண்டிற்காக 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய PF/Board of Survey/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 இன் வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அமைச்சினால் அந்த அறிக்கை 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2011 ஆம் ஆண்டிற்கே வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### (ஆ) ஏனைய நிறுவனங்களிற்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் சுதேச மருத்துவத்துறை அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த வாகனத்தின் சகல பராமரிப்பு நடவடிக்கைகளும் சுதேச மருத்துவத்துறை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டு வரை அது அமைச்சிற்கு சட்டரீதியாக கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆயர்வேத திணைக்களத்திற்குச் சொந்தமான வான் வாகனமொன்று 2010 மே 25 ஆந் திகதி முதல் ஒரு வாரத்திற்கென தற்காலிமாக சுதேச மருத்துவத்துறை அமைச்சு பெற்றுக்கொண்டிருந்தது. 2013 ஆம் ஆண்டு வரை அவ்வாகனம் ஆயர்வேத திணைக்களத்திற்கு மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,766,765 ஆன பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) செலவின விடயமொன்றிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாட்டினை ரூபா 101,607 ஆல் மிகைத்து ரூபா 439,810 பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

## 1.6 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 104 | இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 115(3)ஆ | முன்னைய ஆண்டின் நவம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டியிருந்த ரூபா 10,411 மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அச்செலுத்துகைக்காக உரிய அதிகாரமுடைய உத்தியோகத்தரிடமிருந்து சான்றுறுதிப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி. 210 (2) | வெலிசறை அரசாங்க ஹோமியோபதி வைத்தியசாலையின் மின்சாரச் சிட்டைகளை உரிய திகதியில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக ரூபா 2,564 தாமதக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை அதற்குப் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி. 760 | 2011 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி உயர் பெறுமதி கொண்ட 14 பொருள் வகைகளில் குறைவுகள் அவதானிக்கப்பட்ட |

| | |
|---|---|
| | போதிலும், அது தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) நி.பி. 772 | அரசாங்க ஹோமியோபதி வைத்தியசாலைகள் அடங்கலாக சுதேச மருத்துவத்துறை அமைச்சிற்கு உரித்தான சகல நிறுவகங்களிலும் 2011 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வின் போது அகற்றுவதற்காக இனங்காணப்பட்ட 71 பொருள் வகைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சுதேசிய மருத்துவத்துறை அமைச்சிற்குச் சொந்தமாக காணப்பட்ட குழாம் வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1992 ஓகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | அமைச்சிற்குச் சொந்தமான உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்களிலும் அரசாங்க முத்திரை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.7 செயற்திட்டங்களை அமுல்படுத்தலின் குறைபாடுகள்

### இளைஞர் மூலிகை விவசாயிகள் கிராமச் செயற்திட்டம்

இளைஞர் மூலிகை கிராமச் செயற்திட்டத்தினை அமுலாக்குவதற்காக சுதேச மருத்துவ அமைச்சினால் அலவ்வ பிரதேச செயலகப் பிரிவில் காணப்படுகின்ற அண்மித்த 05 கிராமங்களின் 50 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். ஒரு குழுவில் 05 விவசாயிகள் என்ற ரீதியில் 10 சிறிய குழுக்களின் ஊடாக 2010 ஆம் ஆண்டில் அச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 600,000 கூட்டுமொத்தத் தொகை செலவிடப்பட்டிருந்தது. அச்செயற்திட்டம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேசம் குறித்து முறையான ஆய்வினை மேற்கொள்ளாதும் அப் பிரதேசத்தின் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளாதும் தூதுவலை பயிரிடப்பட்டிருந்ததுடன் அப்பயிர்ச்செய்கை வெற்றியளித்திருக்கவில்லை. அதற்கு முன்னர் வட்டுக்கத்தரி பயிரிடுவதற்கு

நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அப்பயிர்ச் செய்கையின் ஒரு பகுதியும் பூஞ்சன நோய் காரணமாக அழிவுற்றிருந்தது.

(ஆ) கிடைத்திருந்த வட்டுக்கத்தரி விளைச்சலை விற்பனை செய்வதற்கு அல்லது அமைச்சினால் கொள்வனவு செய்வதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2012 ஆகஸ்ட் 30 ஆந் திகதியில் வட்டுக்கத்தரிகள் பழுத்திருந்தன.

(இ) பயிர்ச்செய்கை முறைகள் தொடர்பில் அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், விவசாய விஞ்ஞானம் தொடர்பில் அறிவுகொண்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து பயிர்ச்செய்கையின் வெற்றிக்காக பொருத்தமான அறிவுரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்ட பிரேரணையின் படி சகல குழுக்களும் அடுத்துவரும் போகத்தில் பயிரிடுவதற்காக 05 விவசாயிகளைக் கொண்ட புதிய அணியொன்றை அறிமுகப்படுத்தியிருக்கவில்லை.

(உ) மூலிகைகளைப் பயிரிடுவதற்கு விவசாயிகளை ஆர்வமூட்டுதல் செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கமாக காணப்பட்ட போதிலும், கணக்காய்வுத் திகதியான 2012 ஆகஸ்ட் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த விவசாயிகளின் விளைச்சல்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாகவும் பூஞ்சன நோயால் அழிவுக்குள்ளான பயிர்ச்செய்கையினைப் பாதுகாப்பதற்காக முறையான அறிவுரைகள் கிடைக்கப்பெறாமை போன்ற காரணங்களினாலும் பயிரிடல் செயற்திட்டம் தொடர்பில் விவசாயிகளின் ஆர்வம் குறைவடைந்திருந்தது.

(ஊ) 2012 யூன் 24 ஆந் திகதி அலவ்வ இளைஞர் மூலிகை விவசாயிகள் கிராமச் செயற்திட்டத்தின் வெளிக்கள அறிக்கையின் படி பரிந்துரையாக முன்மொழியப்பட்டிருந்த ஆபத்துக்குள்ளாகியுள்ள வட்டுக்கத்தரி பயிர்ச்செய்கையினை பிடுங்கி விற்பனை செய்தல் அத்துடன் தூதுவலையினை பயிரிடுவதற்காக விவசாயிகளுக்கு விரைவாக ஆலோசனைகளை வழங்குதல் போன்ற விடயங்கள் கணக்காய்வுத் திகதியான 2012 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை நிறைவேற்றப்பட்டிருக்காமையால் கீழே காட்டப்பட்டுள்ள சிக்கல்கள் எழுந்திருந்தன.

(i) சில விவிசாயிகள் வட்டுக்கத்தரிச் செடிகளை பிடுங்கி துண்டாக்கி உலர்த்தி பைகளில் அடைத்து வைத்திருந்த போதிலும், அவற்றை

விற்பனை செய்ய முடியாது போயிருந்தமையால் அவ் உலர்ந்த மூலிகைகள் அழிவடைந்திருந்தன.

(ii) தூதுவலை நாற்றுமேடைகளில் பூக்கள் பூத்திருந்ததுடன், அச்செடிகளை பயிர்செய்கை நிலத்தில் நடுவதற்காக கணக்காய்வுத் திகதியான 2012 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை விவசாயிகளிற்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிரந்தரப் பயிராக நடுவதற்கு விவசாயி ஒருவருக்கு ரூபா 150 சந்தை விலை கொண்ட 02 வெள்ளைச் சந்தனச் கன்றுகள் வீதம் வழங்கப்பட்டிருந்ததுடன் பரிசோதிக்கப்பட்ட பயிரிடப்பட்டிருந்த நிலங்களில் 23 கன்றுகள் அழிவடைந்திருந்தன.

(எ) பயிர்ச்செய்கைச் செயற்திட்டத்தினை பயனுள்ள செயற்திட்டமொன்றாக மாற்றுவதற்காக விவசாயிகளுக்கு சரியான அறிவுரைகளை வழங்குதல், அந்த அறிவுரைகளை சகல அணிகளுக்குமிடையே தொடர்பாடல் செய்தல் மற்றும் அந்த விவிசாயிகளின் விளைச்சல்களை கொள்வனவு செய்வதற்காக சந்தை ஒன்றை ஏற்படுத்துதல் அல்லது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் மூலிகை உற்பத்தி கூடங்களிற்காக இவ்வுற்பத்திகளைக் கொள்வனவு செய்தவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் விளைச்சல்கள் கொள்வனவு செய்யப்படும் வரை பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகள் வெற்றியளித்திருகக்வில்லை.

## 1.8 செயலாற்றல்

### (அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2012 ஆம் ஆண்டின் அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஹோமியோபதி மருத்துவ சிகிச்சையளிப்பதற்காக செலவின விடயம் 138-1-2-1503-1 இன் கீழ் ரூபா 6,600,000 ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 5,513,899 செலவில் 7 ஹோமியோபதி மருத்துவ சிகிச்சையளிப்புகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் புதிதாக சிகிச்சையளிப்புகளை ஆரம்பிப்பதற்காக இடங்களை இனங்காணல் மற்றும் வைத்தியர்களை நியமித்தல் போன்றன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,086,101 ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செலவின விடயம் 138-2-3-2502-2 இன் கீழ் ஹோமியோபதி மருத்துவச் சபையின் கட்டிட திருத்தம், பயிற்சி நிலையத்தின் திருத்தம், பாதுகாப்பு மதில் மற்றும் வாயிற் கதவைத் திருத்துவதற்காக ரூபா 12,000,000 ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் பூரணப்படுத்தப்படாதிருந்தமை காரணமாக ரூபா 5,245,572 ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) செலவின விடயம் 138-2-3-2502-3 இன் கீழ் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த 4 இளைஞர் மூலிகை விவசாயிகள் கிராமச் செயற்திட்டத்திற்காக ரூபா 95,000,000 ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பதவிய மூலிகைத் தோட்டம் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், ஹொரவபொத்தானை, மத்திய நுவரகம் பளாத மற்றும் மதவாச்சி போன்ற செயற்திட்டங்கள் ஆரம்பிக்கக்பட்டிருக்கவில்லை.

(iv) இளைஞர்களுக்கான புதிய மூலிகை விவசாயிகள் கிராமம் மற்றும் மூலிகை விவசாயிகள் கம்பனியொன்றை தாபிப்பதற்காக 138-2-3-2502-6 இன் கீழ் ரூபா 800,000 ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்டிருந்த மூலிகை விவசாயிகள் கம்பனி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போசாக்கு மாளிகை நிகழ்ச்சித்திட்டம்

உள்நாட்டு உணவு பானங்களை பிரபல்யப்படுத்துவதன் ஊடாக மக்களின் போசாக்கு நிலையினை உயர்த்தும் நோக்குடன் போசாக்கு மாளிகை நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. 2007 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை அதற்காக ரூபா 1,242,605 செலவிடப்பட்டு தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மொனராகலை பிரதேசத்தில் போசனை மாளிகை உட்பட 03 போசாக்கு மாளிகைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) போசாக்கு மாளிகையினை நிர்மாணிக்கும் நோக்கத்தினை அடைந்துகொள்ளல் மற்றும் அதன் செயலாற்றல் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கையின் படி கஞ்சி வண்டில்களை பெற்றுக்கொண்ட நபர்கள் மாதாந்த மூலிகைப் பான விற்பனை வருமானத்திலிருந்து ரூபா 500 இனை சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கவேண்டிய போதிலும், அவ்வாறு பணம் செலவு வைக்கப்பட்டமை தொடர்புடைய கோவைகளிலிருந்து உறுதிப்படுத்தப்படவில்லை.

## 1.9 நட்டங்களும் சேதங்களும்

அரசாங்க ஹோமியோபதி வைத்தியசாலையில் 2005 யூலை 10 ஆந் திகதி ரூபா 367,901 பெறுமதியான 2,222 Globules பக்கட்டுக்களில் ஏறத்தாழ ரூபா 348,198 பெறுமதியான 2,103 பக்கட்டுக்கள் பாவனைக்கு எடுக்கப்பட முடியாதவையாக ஆய்வுகூடத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் 2013 ஆம் ஆண்டு வரை அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10 முகாமைத்துவ பலவீனங்கள்

### 1.10.1 ஹெலவெத வீடுகளை நிர்மாணித்தல்

சுதேச மருத்துவத்துறை அமைச்சினால் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஹெல வெத கெதர செயற்திட்டத்தின் கீழ் 2012 திசெம்பர் வரை ரூபா 43,438,389 செலவில் 14 மாவட்டங்களில் 42 ஹெல வெத வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஹெல வெத வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிகள் சுதேச மருத்துவ அமைச்சிற்கு கையேற்கப்பட்டமை காரணமாக அந்த வீடுகளின் உரிமை அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருப்பினும், அவற்றை தொடர்ச்சியான சிகிச்சை வழங்கல்களிற்காக பயன்படுத்த வேண்டுமென்றோ அல்லது வைத்தியரினால் செயற்பட வேண்டிய முறை குறித்தான ஆலோசனைகளோ அல்லது தொடர்புடைய உடன்படிக்கைகளில் கைச்சாதிடப்பட்டோ இருக்கவில்லை.

(ஆ) குறித்த வைத்தியரின் பிந்திய தலைமுறைகளுக்கு இந்த ஹெல வெத வீடுகளை பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல் தொடர்பில் அல்லது சுதேச மருத்துவ அமைச்சிற்குச் சொந்தமான இக்கட்டிடங்களின் எதிர்கால பயன்படுத்தல்கள் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) இந்த ஹெல வெத வீடுகள் குறித்த மருத்துவர்களின் பயன்பாட்டிற்காக எழுத்துமூலம், நிபந்தனைகளுடன் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான எண்ணிக்கையும்**

2013 ஏப்ரல் 10 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 42 | 33 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 265 | 242 | 23 |
| (iv) | ஆரம்ப நிலை | 56 | 50 | 06 |
| | மொத்தம் | 367 | 327 | 40 |

2013 ஏப்ரல் மாதமளவில் 40 வெற்றிடங்களை நிரப்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 220 – ஆயுர்வேதத் திணைக்களம்

## 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

ஆயுர்வேதத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 27 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**2.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் ஆயுர்வேதத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்குரிய 22001 ஆம் விடய இலக்கத்திற்கான அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள் மீதான இணக்கக் கூற்று 2013 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 10 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2013 ஏப்ரல் 10 ஆந் திகதியன்றே அது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) மூலதனச் செலவினத்திற்காக ரூபா 296,376,600 தேறிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அதில் ரூபா 70,709,826 இனை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு ரூபா 225,663,774 அல்லது மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய ஏற்பாட்டில் 24 சதவீதமாக காணப்பட்டது.

(ii) 15 மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவின விடயங்களிற்காக ரூபா 49,180,000 கூட்டுத்தொகையான ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் எத்தொகையும் பயன்படுத்தப்படாமையால் ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

(iii) 02 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு ரூபா 506,902 அல்லது மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய ஏற்பாட்டில் 70 சதவீதமாக காணப்பட்டது.

(iv) 220-2-2-0-2502(1) ஆம் செலவின விடயத்திற்காக குறைநிரப்பு ஏற்பாட்டினால் ரூபா 20,000,000 நிதி ஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 2,692,392 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 17,307,608 அல்லது 87 சதவீத ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) பொதுவைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொதுவைப்புக் கணக்கிலுள்ள மீதி ரூபா 8,269,562 ஆக காணப்பட்டதுடன் 2 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவருகின்ற ரூபா 347,689 வைப்புக்கள் தொடர்பில் நி.பி. 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 22001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,478,746 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

(ii) தனிப்பட்டோர் மீதிகளின் வகைப்படுதத்தல் பொழிப்பின் மொத்தத்திற்கும் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆண்டிறுதி மீதிக்கும் இடையே ரூபா 38,225 வேறுபாட்டிற்கான காரணங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(iii) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 13.5 ஆம் பிரிவின் பிரகாரம் பண்டிகை முற்பணங்கள் ஓராண்டினுள் அறவிடப்பட வேண்டிய போதிலும், 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் 06 உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்த பண்டிகை முற்பணங்களை அறவிடுவதற்கு 2013 ஆம் ஆண்டு வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஏனைய நிறுவனங்களிலிருந்து இடமாற்றம் பெற்று வந்திருந்த 06 உத்தியோகத்தர்களின் ரூபா 460,426 கடன் மீதி தொடர்பில் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்றும் குறைவாகப் பயன்படுத்தியுமிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்துக்களின் வகை | | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலப்பகுதி |
|---|---|---|---|
| பொறலை ஆயுர்வேத வைத்தியசாலை | நிழற்படப் பிரதி இயந்திரம் | 1 | 2012 மார்ச் 01 முதல் 2013 யூலை வரை |
| | மருந்துகளை உலர்த்தும் இயந்திரம் | 1 | - |
| | மாத்திரைகளை தயாரிக்கும் இயந்திரம் | 1 | - |
| | மருந்து கலக்கும் இயந்திரம் | 1 | - |
| | இலைகளை அரைக்கும் இயந்திரம் | 2 | - |
| | கதிர்வீச்சு இயந்திரம் | 1 | - |
| நாவின்ன ஆயுர்வேத ஆய்வுகூடம் | டென்சினோ மீற்றர் | 1 | 2007 முதல் 2012 திசெம்பர் 31 வரை |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய PF/Board of Survey/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அந்த அறிக்கை 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2011 ஆம் ஆண்டிற்கே வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(இ) வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

2010 மே 25 ஆந் திகதி சுதேச மருத்துவ அமைச்சின் கோரிக்கையின் மீது திணைக்களத்திற்குச் சொந்தமான வான் வாகனமொன்று ஒரு வார காலத்திற்காக அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டு வரை திணைக்களத்திற்குப் மீளவும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) திர்க்கப்படாத பொறுப்புக்கள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

திணைக்களத்தினால் 2012 திசெம்பர் 31 இல் தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்பு மீதிகளின் மொத்தம் ரூபா 154,637,349 ஆகும்.

**2.5 இணக்கமின்மைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) தாபன விதிக்கோவை | | |
| VII ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு | | ஹல்துமல்ல, பட்டிபொல, பின்னதுவ மூலிகைத் தோட்டங்களில் ஊழியர்கள் பெற்றுக்கொண்ட |

| | | |
|---|---|---|
| | | சம்பளமற்ற 501 விடுமுறை நாட்களிற்காக செலுத்தியிருந்த சம்பளம் மீள அறவிடப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணங்கள் | | |
| (i) நி.பி. 94(1) | 784,000 | வருடாந்த மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு காணப்பட்டாலன்றி எவ்வித செலவினமோ அல்லது பொறுப்போ ஏற்படுத்திக்கொள்ளக் கூடாத போதிலும், ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத 220-2-2-2103 ஆம் செலவின விடயத்திற்காக ரூபா 784,000 பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன. |
| | 30,430,827 | பொறுப்புக்களை ஏற்படுத்திக்கொள்வதற்கான உரிமை காணப்பட்ட போதிலும், அங்கீகரிக்கப்பட்ட செலவின மதிப்பீட்டினை மீறி 2012 ஆம் ஆண்டின் 14 செலவின விடயங்கள் தொடர்பில் அவ்வெல்லை மீறப்பட்டிருந்த தொகை ரூபா 30,430,827 ஆகும். |
| (ii) நி.பி. 94(2) | 33,052,472 | வருடாந்தம் மீண்டுவரும் சேவைகளிற்காக பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்கையில் அவ்வாறு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட தொகை கடந்த மூன்று ஆண்டுகளின் மதிப்பீட்டுத் தொகை அளவில் 50 சதவீதத்திற்கு மேற்படாதிருக்க வேண்டிய போதிலும், 6 செலவின விடயங்கள் தொடர்பில் அவ்வெல்லையினை மீறி ரூபா 33,052,472 ஏற்பாடு காணப்பட்டதுடன் அது தொடர்பில் திறைசேரியின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி. 104 | | 2011 செப்தெம்பர் 22 ஆந் திகதி ஏறத்தாழ 30 ஆண்டுகள் பழமைவாய்ந்த சந்தன மரம் வெட்டப்பட்டு களவாடப்பட்டிருந்தமை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (iv) நி.பி. 165(4)(அ) | | பொறளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் சிறாப்பரின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் தொடர்புடைய பதவிநிலை உத்தியோகத்தரினால் பரிசோதனைக்குட்படுத் தப்பட்டிருக்கவில்லை. |
| (v) நி.பி. 187(3) | 200,000 | பொறளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் சிறாப்பரிற்கு கிடைக்கும் பணங்கள், 7 நாட்களிற்கு ஒரு முறை அனுப்பிவைக்கப்பட்டமை காரணமாக அண்ணளவாக ரூபா 200,000 தொகை சிறாப்பர் பிரிவில் வைத்திருக்கப்பட்டமை. |
| (vi) நி.பி. 753(2) | | பொறளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலை உற்பத்தி ஆலையின் எப் பிரிவும் பொதுக் களஞ்சியத்திலிருந்து கிடைக்கின்ற பொருட்களிற்காக பெறுவனவுக் கட்டளையினை தயாரித்திருக்கவில்லை. |
| (vii) நி.பி. 755(1) | | பொறளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் கட்டுப்போடுதல் பிரிவு, வாத மற்றும் தைலங்கள் பிரிவுகளில் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் அப்பிரிவுகளிலிருந்து இடமாற்றம் பெற்றுச்செல்கையில் தமது பொறுப்பிலிருந்த பொருட்களை பதில் உத்தியோகத்தரிடம் ஒப்படைத்திருக்கவில்லை. |
| (viii) நி.பி. 772 | 185,390 | ஆயுர்வேத ஆய்வுகூடத்தில் முடிவடைந்த மருந்துகள் களஞ்சியத்தில் ரூபா 185,390 பெறுமதியான பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத பொருட்களை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் 02 ஆண்டுகளாக எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ix) நி.பி. 1646(அ) மற்றும் (ஆ) | | வாகனங்களின் லொக் புத்தகங்கள் நாளதுவரையாக பேணிவரப்பட்டிருக்கவில்லை. ஆயுர்வேத திணைக்களத்தின் குழாம் |

வாகனங்களிற்கான நாளாந்த ஓட்டக்குறிப்புகள் மற்றும் மாதாந்தப் பொழிப்பறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(x) நி.பி. 1647(உ) திணைக்களத்தினால் வாகனங்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிவரப்பட்டிருக்கவில்லை.

## 2.6 செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் காணப்பட்ட நலிவுகள்

பொறளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் பஞ்சகர்ம கட்டிடத்தினை திருத்துதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விலைமனுக் கோரலிற்கான அறிவித்தல் ஆங்கில மொழியில் மாத்திரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஒரு மொழியில் மாத்திரம் அவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தமையால் கொள்வனவிற்காக இரண்டு விலைமனுதாரரர்கள் மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

(ஆ) விலைமனுக் கோரலிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய சகல திருத்தங்களும் இனங்காணப்பட்டிருக்காமையால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,021,142 இற்கான சிட்டைகள் மேலதிக வேலைகளிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த ஒப்பந்தப் பெறுமதியில் ஏறத்தாழ 16 சதவீதமாக காணப்பட்டது.

(இ) மேற்படி திருத்தம் தொடர்பில் மதிப்பீட்டினைத் தயாரிக்கையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 8.13.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இரண்டாம் மாடியில் திருத்த நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அதிலுள்ள கழிவறையின் மேல் மாடியிலிருந்து நீர் ஒழுக்குக் காணப்பட்டது.

(உ) ஒப்பந்த உடன்படிக்கையின் படி இந்த திருத்த வேலைகள் 2012 மார்ச் 02 ஆந் திகதியளவில் பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வுத் திகதியான 2012 திசெம்பர் 02 வரை பூரணப்படுத்தப்படாதிருந்ததுடன் அதற்காக தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.7 செயலாற்றுகை**

(அ) 2012 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பின்வரும் பிரேரணைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

i. ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆயுர்வேத மருந்துகளிற்காக எடுக்கப்படுகின்ற தெரிவுசெய்யப்பட்ட பழங்கள் மற்றும் மரக்கறிகளில் antioxygen விகிதாசாரத்தினை அளவிடல்

ii. இரசாயன ஆய்வுகூடத்தினை மேம்படுத்தி ஆய்வுகளை நடாத்தல்

iii. மருந்து மூலிகைச்செடிகள் தொடர்பில் உயர்தர மாணவர்களிற்காக சிறிய கையேட்டினை தயாரித்தல்.

iv. மரங்கள் பொருத்துதல் பிரிவு ஒரு ஆண்டிற்கும் மேலாக செயற்படாதிருந்தமை காரணமாக மரங்களைப் பொருத்துதல் தொழில்நுட்பத்தின் மூலம் செஞ்சந்தன மரத்தின் அத்தியாவசிய இரசாயன கூட்டுக்கள் தொடர்பில் ஆய்வினை மேற்கொள்ளல்.

(ஆ) வைத்தியசாலைச் செயலாற்றல்

கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத வைத்தியசாலையில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த செயற்பாடுகள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) பத்து மாடி வைத்தியசாலை தொகுதி நிர்மாணத்தின் ஆரம்ப நடவடிக்கைகள்.

(ii) பத்து மாடி வைத்தியசாலை தொகுதியினை நிர்மாணிப்பதற்கு முன்னர் தற்காலிக அலுவலகத் தொகுதியின் நிர்மாணம்

(iii) இரண்டு திறந்தவெளி பாதுகாப்புக் கூடங்களை நிர்மாணித்தல்

(iv) புதிய கட்டிடத்தின் நிர்மாணம் மற்றும் அருகிலுள்ள காணியினை வைத்தியசாலைக்கு கையேற்றல்.

(v) மிகவும் விஸ்தரிக்கப்பட்ட வார்ட் தொகுதியை நிர்மாணித்தல் (சிறுவர், பிக்குகள் மற்றும் மகப்பேற்று வார்ட்கள் அடங்கலாக)

(vi) நவீன உபகரணங்கள் மற்றும் பயிற்சிபெற்ற பரிசோதகர்களை உள்ளடக்கிய சகல வசதிகளுடன் கூடிய நோய்களைக் கண்டறியும் ஆய்வுகூடமொன்றை ஏற்படுத்துதல்

(vii) அனைத்து வசதிகளுடனும் கூடிய பஞ்சகர்ம சிகிச்சை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக இரண்டு பஞ்சகர்ம பிரிவுகளின் தரைக்கு தரைக்கல் பிடித்தல், பென்ரி கபட்டுக்களை தயாரித்தல், உள்ளே பிரிவுகளை வேறாக்கல் மற்றும் தேவையான உபகரணங்களை பெற்றுக்கொள்ளல்.

(இ) மூலிகைத் தோட்டங்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்திற்குச் சொந்தமான பின்னதுவ மற்றும் ஹல்துமுல்ல மூலிகைத் தோட்டங்களில் முறையே அபிவிருத்தி செய்யப்படாதுள்ள நிலத்தின் அளவு 1 ஏக்கர் மற்றும் 4 ஏக்கர்களாக காணப்பட்டதுடன் பட்டிபொல மூலிகைத் தோட்டத்தில் அதன் அளவு கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) மூலிகைத் தோட்டங்களில் மீளாய்வாண்டிற்கான வருமானத்தினை செலவினத்துடன் ஒப்பிடுகையில் பின்வரும் பாரிய முரண்கள் இடம்பெற்றிருந்தன.

| **மூலிகைத் தோட்டத்தின் பெயர்** | **வருமானம்** | **செலவினம்** | **செலவினம் வருமானத்தின் சதவீதமாக** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| பின்னதுவ | 1,300,084 | 4,927,616 | 379 |
| ஹல்துமுல்ல | 2,044,901 | 53,206,966 | 2,602 |
| பட்டிபொல | 291,325 | 19,635,251 | 6,740 |

(iii) சகல மூலிகைத் தோட்டங்களிலும் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற மூலிகைச் செடிகளின் உற்பத்தியில் கனிசமான முரண்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| மூலிகைத் தோட்டத்தின் பெயர் | செடிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 |
| பின்னதுவ | 44,254 | 58,186 | 69,358 |
| ஹல்துமுல்ல | 11,730 | 32,819 | 44,278 |
| பட்டிபொல | 5,994 | 8,241 | 5,767 |
| | 61,978 | 99,246 | 119,403 |

(iv) மூலிகைத் தோட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- மூலிகைத் தோட்டங்களிலிருந்து திணைக்களத்தின் வைத்தியசாலை உற்பத்தி ஆலைகள் மற்றும் ஆயர்வேத மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு மருந்துகளை உற்பத்திசெய்வதற்குத் தேவையான மருந்து மூலப்பொருட்களை பெற்றுக்கொள்தல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை.
- பொருட்கள் மற்றும் மூலிகைச் செடிகளின் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காமை.
- மூலிகைச் செடிகள் தொடர்பில் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்காமை
- மூலிகைக் கன்றுகளிற்கு பெயரிடப்பட்டிருக்காமை.
- மூலிகைத் தோட்டங்கள் அமைந்துள்ள காணிகளின் திட்டங்கள் தொடர்பிலான வீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை.
- மேலதிகநேரம் மற்றும் பிரயாணச் செலவினம் அதிகமாக உள்ளமை

- ஊழியர்களின் வருகை மற்றும் விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ளல் திருப்தியற்றுக் காணப்பட்டமை.
- மூலிகைத் தோட்டங்களை பேணிச்செல்வதற்கு தேவையான பௌதீக வளங்கள் தேவையான நேரத்தில் வழங்கப்பட்டிருக்காமை.

(v) பின்னதுவ மூலிகைத் தோட்டத்தில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 461,020 பெறுமதியான கூலிகைக் கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) பின்னதுவ மூலிகைத் தோட்டத்தில் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- ○ தோட்டத்திற்காக பெயர்ப்பலகை ஒன்றைப் பொருத்துதல் (உதாரணமாக: மூலிகைத் தோட்டத்தின் நுழைவுப் பாதையில் பெயர்ப்பலகையொன்று இல்லாமை)
- ○ நடுகைப் பொருட்களைப் பேணுவதற்காக வலை வீடொன்றை அமைத்தல்
- ○ நடுகைப் பொருட்களின் உற்பத்திக்காக பொலித்தீன் கூடமொன்றை அமைத்தல்
- ○ நார்களுடன் கூடிய விசேட அரணொன்றை ஏற்படுத்துதல்
- ○ மருந்துச் செடிகளின் பகுதிகளைச் சேகரித்தல் மற்றும் தயாரிப்பு நிலையமொன்றை தாபித்தல்
- ○ தோட்டத்தினுள் summer hut, “கபானா”, வங்கி போன்றவற்றை நிறுவுதல்.
- ○ நீரியல் விசேடங்களிற்காக குளத்தை ஏற்படுத்துதல்
- ○ பயிரிடப்படாதுள்ள நிலங்களில் (1.5 ஏக்கர்) பயிரிடுதல்.
- ○ மூலிகைக் கன்றுகள் மேம்படுத்தல் நடவடிக்கைகள்
- ○ மூலிகைத் தோட்டங்களில் மூலிகைக் கன்றுகளின் அபிவிருத்திக்காக தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், பாடசாலைப் பிள்ளைகளை அறிவுறுத்துதல், சகாய விலையில் மர நடுகைப் பொருட்களை வழங்குதல் மற்றும் பிரச்சாரம்.

(vii) ஹல்துமுல்ல மூலிகைத் தோட்டத்தின் பசுமை இல்லத்தில் கூரையினைத் திருத்துவதற்காக ரூபா 1,690,416 ஆன ஒப்பந்தம் அரசாங்க தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2013 மே 07 ஆந் திகதி வரை அத்திருத்தங்கள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(viii) ஹல்துமுல்ல மூலிகைத் தோட்டத்திலுள்ள பழைய விரிவுரை மண்டபத்தினை திருத்துவதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) ஹல்துமுல்ல மூலிகைத் தோட்டத்திலுள்ள ஏறத்தாழ 04 ஏக்கர் காணியினை சுத்தப்படுத்தி பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிற்காக பயன்படுத்துதல், எல்லை வேலியினை தெளிவாக பாதுகாத்தல், பழைய விரிவுரை மண்டபத்தினை திருத்துதல், அலுவலகத்திற்கு பூச்சிடுதல் மற்றும் வேம்பு பசுமை நிலையத்தினை திருத்துதல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(x) பட்டிபொல மூலிகைத் தோட்டத்திலுள்ள சுற்றுலா விடுதிக்கான சமையலறை ரூபா 2,699,394 மதிப்பீட்டுக் கிரயத்தில் 2013 பெப்ரவரி 15 ஆந் திகதிக்கு முன்னர் நிர்மாணித்து கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2013 யூன் மாதம் வரை அது நிர்மாணித்து முடிக்கப்பட்டிருக்கவில்லை.

(xi) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி பட்டிபொல மூலிகைத் தோட்டத்தில் நிறைவேற்றப்படுவதற்கிருந்த பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- வலை வீடொன்றை நிறுவுதல்.
- குளாய்க் கிணறு நிர்மாணித்தல்
- மாடுகளிற்காக சிறிய மாட்டுக் கொட்டிலொன்றை அமைத்தல்
- பிரதான கேட் ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் அதற்கு அருகாமையில் கன்றுகள் விற்பனை நியைம், சிறிய சிறுவர் பூங்கா, மலசல கூடங்கள் இரண்டினை நிர்மாணித்தல்
- கண்ணாடி இல்லத்திற்கு வர்ணம் தீட்டுதல்
- பஞ்சகர்ம மருத்துவ நிலையமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- சுற்றுலா விடுதியின் பயன்பாட்டிற்காக உயிரியில் வாயு பிரிவொன்றை நிர்மாணித்தல்.
- களத்திலுள்ள ஆண் மற்றும் பெண்களிற்காக 02 கழிவறைகளை நிர்மாணித்தல்.

## 2.8 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வைத்தியசாலையின் மின்சாரச் சிட்டைகளைச் செலுத்துதல் தாமதிக்கப்பட்டிருந்தமை காரணமாக 2010 ஒக்தோபர் முதல் 2012 நவம்பர் வரையான காலத்திற்காக ரூபா 14,005 தண்டப்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்கள வளவில் வீழ்ந்திருந்த ஏறத்தாழ 30 வருடங்கள் பழமைவாய்ந்த சந்தன மரமொன்று 2011 ஒக்தொபர் 22 ஆந் திகதி களவாடிச் செல்லப்பட்டிந்த போதிலும் அது தொடர்பில் நி.பி. 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 மார்ச் 07 ஆந் திகதிய 03/05/01/2/14 ஆம் இலக்க திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கடிதத்தின் படி 2012 ஒக்தோபர் 10 ஆந் திகதி பல்லேகலே மூலிகைத் தோட்ட வளவில் வெள்ளைச் சந்தன மரமொன்று வெட்டிக் களவாடிச் செல்லப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் நி.பி. 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஹல்துமுல்ல மூலிகைத் தோட்டத்திலுள்ள வேப்ப மரத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த பசுமை இல்லத்தின் கூரை சேதமடைந்து திருத்தப்படாமை காரணமாக மழைநீர் உட்புகுந்தமையால் 200 வேப்பங் கன்றுகளும் 16 தாய் மரங்களும் அழிவுற்றிருந்தன. வேப்பங் கன்றொன்றின் பெறுமதி ரூபா 100 ஆக காணப்பட்டதுடன் தாய் மரத்தின் பெறுமதி கணிப்பிடப்பட்டிருக்காமையால் அண்ணளவாக ரூபா 20,000 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(உ) யக்கல ஆயர்வேத வைத்தியசாலையில் மருந்துச்சாலை தொழிலாளர் ஒருவர் 2001 முதல் 2012 திசெம்பர் 31 வரை பெற்றுக்கொண்டிருந்த சம்பளமற்ற 322 ½ விடுமுறை தினங்கள் மற்றும் 35 அரைச்சம்பள விடுமுறை தினங்களிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 65,843 தொகை கணக்காய்வுத் திகதியான 2014 மார்ச் 06 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) விடுமுறைகள் பதிவேட்டின் படி 85 ஊழியர்கள் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அரைச் சம்பள மற்றும் சம்பளமற்ற விடுமுறைகளைப் பெற்றிருந்தனர். கணக்காய்வுத் திகதியான 2013 பெப்ரவரி மாதம் வரை அத்தொகையினை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 51 ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட வேண்டிய தொகை ரூபா 247,382 ஆக காணப்பட்டதுடன் 34 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை கணிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கணக்காய்வுத் திகதியான 2013 பெப்ரவரி மாதம் வரை யக்கல ஆயர்வேத வைத்தியசாலைக் களஞ்சியத்தில் காலாவதியாகியிருந்த மருந்துகளின் பெறுமதி ரூபா 10,872 ஆக காணப்பட்டதுடன், ரூபா 6,589 பெறுமதியான மருந்து போத்தல்களை எலிகள் சேதப்படுத்தியிருந்தன.

## 2.9 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆயுர்வேத ஆய்வுகூடத்தில் 2005 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 14,605,000 பெறுமதியான GCMS இயந்திரம் பூரண பயன்பாடின்றி ஆய்வுகூடத்தில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு 2012 ஒக்தோபர் 24 ஆந் திகதி யக்கல ஆயுர்வேத வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டிருந்த 50 தும்பு மெத்தைகள் பயன்படுத்த முடியாது குவித்து வைக்கப்பட்டிருந்தன.

## 2.10 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தினால் பொறளை ஆயுர்வேத வைத்தியசாலை, நாவின்ன ஆய்வுகூடம் மற்றும் ஆயுர்வேத நிலையம் ஆகியவற்றிற்கு ஒன்று ரூபா 72,950 வீதப்படியான 6 மல்ரிமீடியா இயந்திரங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) ஆயுர்வேத ஆய்வுகூட நூலகத்தில் புத்தகங்களைப் பயன்படுத்திய பின்னர் அவற்றை மீள ஒப்படைப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. நூலகப் பயன்படுத்துனர்களால் ஓராண்டிற்கும் மேலாக 14 சந்தர்ப்பங்களில் 19 புத்தகங்கள் வைத்திருக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் மீளவும் புத்தகங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது காணாமல்போன புத்தகங்களின் பெறுமதியினை குறித்த நபர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) யக்கல விக்ரமாராச்சி ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் வெளிவாரி நோயாளர் பிரிவின் இருப்புப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தைலங்களின் அளவிற்கும் பௌதீக மீதிக்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் காணப்பட்டன.

| தைலங்களின் வகை | 2013 பெப்ரவரி 07 ஆந் திகதிய புத்தகத்தின் படி மீதி | பௌதீக மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | போத்தல் | போத்தல் | போத்தல் |
| சர்சபாதி தைலம் | (628) | 00 | 628 |
| நீலாதி தைலம் | 1137 | 1110 | (27) |
| பாகுவ் தைலம் | 75 | 150 | 75 |
| பிண்ட தைலம் | (1135) | 60 | 1395 |
| பீனஸ் தைலம் | 4530 | 4875 | 345 |

(ஈ) திணைக்களத்திற்குச் சொந்தமான ஆயுர்வேத வைத்தியசாலைகளில் நோயாளர்களிற்கு உணவுகளை வழங்குதல் தொடர்பில் முறையானதும் தெளிவானதுமான அறிவுறுத்தல்கள் அந்த வைத்தியசாலைகளிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. (உதாரணமாக நோயாளர் ஒருவருக்கு உணவு வேளையொன்றிற்காக வழங்கப்பட வேண்டிய உணவின் அளவு காண்பிக்கப்பட்டிருக்காமை)

(உ) திணைக்களத்தினால் ஆயுர்வேத சேவைகள் (பஞ்சகர்ம) நிறுவனங்களைப் பதிவுசெய்தல் மற்றும் பதிவுகளைப் புதுப்பித்தல் சான்றிதழ்களை வழங்குதல் நடைமுறை தொடர்பில் கணக்காய்வில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013 மார்ச் 11 ஆந் திகதி வரை ஆயுர்வேத திணைக்களத்தில் ஆயுர்வேத சேவைகள் (பஞ்சகர்ம) நிறுவனங்களாகப் பதிவுசெய்யப்பட்டிருந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 107 ஆகக் காணப்பட்டது. அவற்றில் இடம்பெறுகின்ற சேவைகள் தொடர்பில் ஆண்டுக்கொரு முறை பரிசோதிக்கப்பட்டு பதிவினை புதுப்பிக்காமை மற்றும் பின்தொடர் ஆய்ந்தறிதல்கள் நடைமுறைகள் இழிவு மட்டத்தில் காணப்பட்டன.

(ii) தனியார் ஆயுர்வேத (மருத்துவம் மற்றும் அதனை அண்மித்த) சேவைகள் நிறுவனங்களைப் பதிவுசெய்தல் தொடர்பில் பணிப்புரைகளைத் தயாரிப்பதற்கான குழு 2012 ஏப்ரல் மாதம் கூடியிருந்த போதிலும், அப்பணிப்புரைகள் 2013 மார்ச் 11 ஆந் திகதி வரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) திணைக்களத்தினால் 2010 சனவரி 04 ஆந் திகதி பண்டாரநாயக ஆயுர்வேத ஆய்வுகூடத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த நோயாளர் காவும் வண்டி 2012 முதல் 2013 பெப்ரவரி வரை சாதாரண போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக 15 சந்தர்ப்பங்களில் பயன்படுத்திக்கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அநேக சந்தர்ப்பங்களில் வைத்தியர்களையும் உத்தியோகத்தர்களையும் வீடுகளிற்கு எடுத்துச்செல்வதற்கும் வங்கி நடவடிக்கைகளிற்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன. இதற்காக செலவிடப்பட்டிருந்த தூர அளவினை உறுதிப்படுத்த முடியவில்லை.

(எ) ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம் 2011 மே 24 ஆந் திகதி ஒன்று ரூபா 42,500 வீதம் ரூபா 85,000 இனை செலவிட்டு இரண்டு நேரப் பதிவு இயந்திரங்களை கொள்வனவு செய்திருந்த போதிலும், நேரப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பொறளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் நூலகத்தின் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நூலகத்தின் நிர்வாகம் வைத்தியர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் வைத்தியரின் கடமை அதிகரிப்புக் காரணமாக நூலகம் நாள்தோறும் திறக்கப்படவில்லை.

(iii) நூலகத்தில் முறையான புத்தகப் பதிவேடொன்று காணப்படவில்லை.

(iv) வெளியே எடுத்துச்செல்லப்படும் புத்தகங்கள் தொடர்பில் முறைப்படி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை மற்றும் நூலகத்தில் பௌதீக ரீதியாகக் காணப்பட்ட 112 புத்தகங்கள் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்காமை

(v) நுலகப் புத்தகங்களின் பயன்படுத்தல் மிகக் குறைவான மட்டத்தில் காணப்பட்டமை, புத்தகங்களிருந்து பயன்பெறாமை மற்றும் பயன்படுத்தல்கள் மிகக் குறைவான மட்டத்தில் காணப்பட்டமையால் நூலகத்தின் பௌதீக வளங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஐ) ஆயுர்வேத அராய்ச்சி நிலையத்தின் அலுவலகப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வருகைகள் பதிவேடு நாளாந்தம் மூடப்பட்ட போதிலும், சிவப்புக் கோடடித்தலின் போது இடப்படுகின்ற நேரம் பிந்திவரும் ஊழியர்களிற்கு கையொப்பமிடுவதற்கு இயலுமான விதத்தில் மீண்டும் மாற்றம் செய்யப்பட்டிருந்தது.

(ii) உத்தியோகத்தர்கள் வருகை தருகையிலும் வெளிச்செல்கையிலும் இடுகின்ற நேரங்கள் பின்னர் திருத்தப்பட்டிருந்தன.

(iii) வழமையாக சில உத்தியோகத்தர்களிற்கு வருகை மற்றும் வெளிச்செல்லலை கையொப்பமிடுவதற்கு மறதியானமை அடுத்தநாள் வருகைப் பதிவேட்டில் முறையற்ற விதத்தில் குறிப்பொன்றாக காட்டப்பட்டிருந்தது.

(iv) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 21 ஆக காணப்பட்ட போதிலும், தற்போது அண்ணளவாக 10 பேர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

(ஒ) பொறளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் உற்பத்தி ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகளை பொதியிடும் வரை உருண்டைகள், சூரணம் போன்ற மருந்து வகைகள் பாத்திரங்களில் வெளியே தெரியும் விதத்தில் வைத்திருக்கப்பட்டிருந்தமை காரணமாக நீர், தூசு மற்றும் கழிவுகள் சேர்தலுக்கான வாய்ப்புக்கள் காணப்பட்டன.

(ஓ) பொறளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் பணம் செலுத்தும் வார்ட் தொகுதியின் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பணம் செலுத்தப்படுகின்ற ஆண்கள் வார்ட்டின் உணவு பரிமாறப்படும் அறையின் சிவிலிம் உடைந்து விழும் அபாயம் காணப்படுகின்றமை.

(ii) 08 மற்றும் 09 ஆம் இலக்க அறைகளின் கழிவறைக் கதவுகள் மற்றும் பூட்டுக்கள் உடைந்துள்ளமை.

(iii) நோயாளர்களின் அறைகளில் யன்னல் சட்டங்களை மூடிவிட முடியாதிருந்ததுடன் அவை இறுகிப்போயிருந்தன.

(iv) அறைகளில் கதவுகள் இத்துப்போயிருந்தன.

(v) பணம் செலுத்தப்படுகின்ற பெண்கள் வார்ட்டின் 03 ஆம் இலக்க அறையில் யன்னல் சட்டமொன்று காணப்படவில்லை.

(vi) அறைகளிற்கு சிவிலின்களிலிருந்து நீர் ஒழுகுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(vii) சில கழிவறைகளில் திருகிகள் செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஔ) திணைக்களத்தின் குழாம் வாகனங்களிற்கான நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மீதான தெரிவுப் பரிசோதனையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த எரிபொருள் அளவு மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதிகள் பரீட்சிக்கப்பட்டு நாளாந்த ஓட்டக் குறிப்புக்களில் வாகனத்திற்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர் கையொப்பமிட்டிருக்கவில்லை.

(க) யக்கல ஆயுர்வேத வைத்தியசாலையின் உலர் மருந்துகள் களஞ்சிய இருப்புப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருந்த 77.155 கி.கிராம் உலர் மருந்து அளவின் பௌதீக இருப்பு மீதி 66.2 கி.கிராம்களாக காணப்பட்டது. அதன்படி 11.555 கி.கிராம் உலர் மருந்துகளில் குறைவொன்று வெளிப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) அன்பளிப்பாக வைத்தியசாலைக்கு கிடைக்கின்ற உலர் மருந்து இருப்புக்கள் புத்தகங்களிற்கு எடுக்கப்பட வேண்டிய போதிலும், யக்கல ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக கிடைத்திருந்த உலர் மருந்துகள் களஞ்சியப் புத்தகங்களிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) காலாவதியான 44 கி.கிராம் கஞ்சா இருப்பு 2013 பெப்ரவரி வரை உலர் மருந்துகள் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டது.

(கீ) கம்பஹ விக்ரமாரச்சி ஆயுர்வேத வைத்தியசாலை உற்பத்தி ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த மருந்துகளின் வழங்கலில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒத்த வகையான பொருட்பதிவேட்டு இலக்கத்தினை பயன்படுத்தி மருந்துகள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) 2013 சனவரி 08 ஆந் திகதி பதிவேட்டு இல. A-557868 இன் கீழ் 50 போத்தல் குடிமருந்துகள் உற்பத்தி ஆலையிலிருந்து வழங்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், இது முடிவுற்ற மருந்துக் களஞ்சியத்தின் இருப்புப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை.

(iii) உற்பத்திப் பிரிவிலிருந்து களஞ்சியத்திற்கு முடிவுற்ற மருந்துகளை கையளிக்கையில் அம்மருந்துகளை கையேற்ற உத்தியோகத்தரால் உற்பத்திப்பிரிவின் மருந்துகளை ஒப்படைக்கும் புத்தகத்தில் கையொப்பமிட்டிருக்கவில்லை.

(iv) உற்பத்திப் பிரிவின் களஞ்சியத்திற்கு மருந்து போத்தல்களை வழங்குகையில் ஒரு சந்தர்ப்பத்தில் அளவும் திகதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 228 | 198 | 30 |
| (ii) | மூன்றாம் நிலை | 131 | 47 | 84 |
| (iii) | இரண்டாம் நிலை | 280 | 168 | 112 |
| (iv) | ஆரம்ப நிலை | 851 | 590 | 261 |
| | கூட்டுத்தொகை | 1490 | 1003 | 487 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 487 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.